உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# சத்துருக்கள் 2



Compiled by
P. Isaac Chandran

நான் உம்மை நோக்கிக் கூப்பிடும் நாளில் என் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள், தேவன் என் பட்சத்தில் இருக்கிறார் என்பதை அறிவேன்.
சங்கீதம் 56:9

இப்பொழுது என் தலை என்னைச் சுற்றிலும் இருக்கிற என் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்தப்படும், அதினிமித்தம் அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுவேன்.
சங்கீதம் 27:6

அவர் என் சத்துருக்களுக்குத் தீமைக்குத் தீமையைச் சரிக்கட்டுவார், உமது சத்தியத்தினிமித்தம் அவர்களை நிர்மூலமாக்கும்.
சங்கீதம் 54:5

அவர் எல்லா நெருக்கத்தையும் நீக்கி, என்னை விடுவித்தார், என் கண் என் சத்துருக்களில் நீதி சரிக்கட்டுதலைக் கண்டது.
சங்கீதம் 54:7

என் தேவன் தம்முடைய கிருபையினால் என்னைச் சந்திப்பார், தேவன் என் சத்துருக்களுக்குவரும் நீதிசரிக்கட்டுதலை நான் காணும்படி செய்வார்.
சங்கீதம் 59:10

என் சத்துருக்களுக்கு நேரிடுவதை என் கண் காணும், எனக்கு விரோதமாய் எழும்புகிற துன்மார்க்கருக்கு நேரிடுவதை என் காது கேட்கும்.
சங்கீதம் 92:11

அவர் தம்முடைய ஜனங்களை மிகவும் பலுகப்பண்ணி, அவர்களுடைய சத்துருக்களைப்பார்க்கிலும் அவர்களைப் பலவான்களாக்கினார்.
சங்கீதம் 105:24

அவர்கள் சத்துருக்களைத் தண்ணீர்கள் மூடிக்கொண்டது, அவர்களில் ஒருவனும் மீந்திருக்கவில்லை.
சங்கீதம் 106:11

நீர் உம்முடைய கற்பனைகளைக் கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர், அவைகள் என்றைக்கும் என்னுடனே இருக்கிறது.
சங்கீதம் 119:98

நம்முடைய சத்துருக்களின் கையிலிருந்து நம்மை விடுதலைபண்ணினவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது.
சங்கீதம் 136:24

நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர், என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர், உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.
சங்கீதம் 138:7

14 நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன்.
சங்கீதம் 81:14

கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார்.
சங்கீதம் 110:1

உம்முடைய கிருபையின்படி என் சத்துருக்களை அழித்து, என் ஆத்துமாவை ஒடுக்குகிற யாவரையும் சங்காரம்பண்ணும், நான் உமது அடியேன்.
சங்கீதம் 143:12

ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்.
நீதிமொழிகள் 16:7

கர்த்தர் பராக்கிரமசாலியைப்போல் புறப்பட்டு, யுத்தவீரனைப்போல் வைராக்கியமூண்டு, முழங்கிக் கெர்ச்சித்து, தம்முடைய சத்துருக்களை மேற்கொள்ளுவார்.
ஏசாயா 42:13

கிரியைகளுக்குத்தக்க பலனை அளிப்பார், தம்முடைய சத்துருக்களிடத்தில் உக்கிரத்தைச் சரிக்கட்டி, தம்முடைய பகைஞருக்குத்தக்க பலனையும், தீவுகளுக்குத்தக்க பலனையும் சரிக்கட்டுவார்.
ஏசாயா 59:18

ஆனாலும், இது சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவரின் நாளும், அவர் தம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுகிற நாளுமாயிருக்கிறது,
எரேமியா 46:10

கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார். இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார். இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.
செப்பனியா 3:15

கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன். கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிரகோபமுள்ளவர். கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர்,அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக்கிறவர்.
நாகூம் 1:2

ஆம்! நாம் நம் தேவனை நோக்கி கூப்பிடும் நாளில் நம் சத்துருக்கள் பின்னிட்டுத் திரும்புவார்கள், நம் தலையை நம்மை சுற்றிலும் இருக்கிற நம் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்துவார்.

நம் சத்துருக்களுக்கு நேரிடுவதை நம் கண் காணுவும், நமக்கு விரோதமாய் எழும்புகிற துன்மார்க்கருக்கு நேரிடுவதை நம் காதுகள் கேட்க்கவும் செய்த தேவனுக்கு ஆனந்த பலிகளையிட்டு, அவரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுவோம்

*****************